Vol.37 Issue No.33 2024 ஆகஸ்ட் 10-13 ரூ.30

உண்மை துணிவு உறுதி

நக்கீரன்

NAKKHEERAN

'நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே' நெ.1 புலனாய்வு வாரமிருமுறை இதழ்

# பொய் போக்சோ! விடுதலையான ஆசிரியர்! அன்றே சொன்னது நக்கீரன்!



ஆசிரியர்
அருள் தாமஸ்

'பொய் புகாரில் போக்சோ! சர்ச்சையில் பள்ளி நிர்வாகம்!' என்ற தலைப்பில் 2022, செப்டம்பர் 17-20 நக்கீரனில் செய்தி வெளியிட்டிருந்தோம். அந்த செய்தியில் முதுகுளத்தூர் தாலுகாவிற்குட்பட்ட திருவரங்கம், திரு இருதய மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் அருள் தாமஸ் என்பவர்மீது பள்ளி நிர்வாகமும், பள்ளியின் தாளாளர் சிங்கராயர் ஆரோக்கியமும் சேர்ந்து பொய்யாக போக்சோ குற்றச் சாட்டை எழுப்பியதால் ஆசிரியர் கைது செய்யப்பட்டது குறித்து எழுதியிருந்தோம். இதில் திடீர் திருப்பமாக, பாலியல் புகார் கொடுத்த மாணவியே அந்த ஆசிரியர் அப்படி தவறாக நடந்து கொள்ளவில்லை என்று யூ டர்ன் அடித்தார். அதே போல், அமுதா என்ற ஆசிரியை, அம்மாணவியின் பெற்றோரை மிரட்டிப் பணிய வைத்ததும் விசாரணையில் தெரியவந்தது.

இந்நிலையில், 9-7-2024ல் மதுரை உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில், ஆசிரியர் அருள்தாஸ் குற்றமற்றவர் என்று தீர்ப்பளித்தது.

இது தொடர்பாக மக்கள் கண்காணிப்பகத்தின் இயக்குனர் ஹென்றி திபேனை சந்தித்தோம்.

"சார் எப்போதும் போக்சோவிற்கு ஆதரவாகத் தானே நிற்பீர்கள்? இம்முறை குற்றம்சாட்டப் பட்டவருக்கு ஆதரவாக நின்றது ஏன்?'' என கேட்டோம்.

"நீங்கள் சொல்வது சரிதான். அந்த பள்ளி, கிறிஸ்துவ மிஷனரியால் நடத்தப்படுகிற, அரசு உதவி பெறும் பள்ளி. ஏற்கனவே அதிகக் கட்டணம் வசூலிப்பதாகத் தொடர்ச்சியாகப் புகார்கள் வந்தவண்ணமிருந்தன. அதேபோல், குற்றம்சாட்டப்பட்டவருக்கு ஆதரவாக பள்ளி மாணவர்களின் பெற்றோர்களும், ஊர்க்காரர்களும் என்னிடம் முறையிட்டார்கள். நக்கீரனிலும், இது பொய்ப் புகாரென்று வெளிவந்த செய்தியைப் பார்த்தேன். அடுத்து நம்ம மக்கள் கண்காணிப் பகத்தினரை விசாரணையில் இறக்கினேன். புகாரளித்த மாணவியின் பெற்றோரை சந்தித்தோம். அந்த பள்ளி ஆசிரியை அமுதா, புகாரை ஒத்துக்கொள்ளவேண்டுமென்று மிரட்டிய ஆடியோவை அவங்க செல்போனில் கேட்டதும், இது புனையபட்ட வழக்கு என்றும், காவல்துறையும் துணைபோனதும் தெளிவானது.


பொய்ப்புகாரில் போக்சோ! சர்ச்சையில் பள்ளி நிர்வாகம்!

அந்த நக்கீரன் செய்தி

முதலில் இவ்வழக்கில் குழந்தைகள் நல வாரியத்தினர் விசாரிக்குமுன்பே அவசர அவசரமாக காவல்துறை விசாரித்து அவரை போக்சோவில்

தள்ளவேண்டிய அவசரம் என்ன? இது முழுக்க முழுக்க பழிவாங்கும் நோக்கத்தில் புனையப்பட்ட வழக்கு என்று தெரிந்துகொண்டோம்.

சி.சி.டி.வி. காட்சியில் அந்த பெண் பரீட்சை எழுதாமல் தனது ஜாமண்ட்ரி பாக்ஸில் தனது பாஸ்போர்ட் புகைப் படத்தின் மேல் பேனாவால் கிறுக்கிக்கொண்டு இருக்கிறது. அப்போது ஆசிரியர் அதைப் பார்த்துவிட்டு 'ஏன் எழுதாமல் உன் போட்டோவை இப்படி கிறுக்குகிறாய்?' என்பதுபோல் கேட்கிறார். அதற்கு அந்த மாணவி ஏதோ பதில் சொல்கிறாள். அடுத்து மாணவியின் தலையைத் தட்டிவிட்டுச் செல்கிறார். அவ்வளவே.

இந்த வீடியோவை யும் அமுதா டீச்சரின் ஆடியோவையும் கேட்ட நீதிபதி, அம்மாணவியை ஆஜர்ப்படுத்த உத்தரவிட் டார். அம்மாணவியிடம் தனியாக விசாரணை நடத்தியவர், 'ஆசிரியர் உன் தலையைத் தட்டுவதை எப் படி உணர்ந்தாய்?' என்ற கேள்விக்கு, 'தந்தையைப்போல் உணர்ந்ததாக'ப் பதிலளித்தாள். அதையடுத்து, ஆசிரியர் குற்றவாளியில்லையென்று தீர்ப்பு வந்தது. நியாயத்தின் பக்கம்தான் மக்கள் கண்காணிப்பகம் எப்போதும் நிற்கும்!" என்றார்



ஹென்றி திபேன்

போக்சோ வழக்கை எதிர்கொண்ட ஆசிரியர் அருள் தாமஸ் நம்மிடம், "இதுவரை 100 புத்தகங்கள் எழுதியுள்ளேன். ஒவ்வொரு மாணவரின் கல்விக்காகவும் உழைத்துள்ளேன். மாணவர்கள் பலருக்கு நானே கல்விக் கட்டணம் கட்டியுள்ளேன். நிர்வாகத்தின் கல்விக் கட்டணக் கொள்ளை குறித்து முறையிட்டிருக்கிறேன். உண்மையாக இருந்ததற் காக என்மீது மாணவியை வைத்து போக்சோ புகாரளிக்கச் செய்து, என்னை கைதுசெய்து வாழ்க்கையையே சூன்யமாக்கினர்.

என்னை மனம் தளரவிடாமல் காப்பாற்றியது ஹென்றி திபேனும், மக்கள் கண்காணிப்பகமும்தான். மாணவர்களின் பெற்றோர்களும், ஊர்க்காரர்களும் எனக்காகப் பேசியது என்மீதான நியாயத்தை அவருக்கு உணர்த்தியது.

நக்கீரனும் நெற்றிப்பொட்டில் அடித்தது போல், 'பொய் புகாரில் போக்சோ! சர்ச்சையில் பள்ளி நிர்வாகம்!' என்ற தலைப்பில் உண்மையை உரக்கச் சொன்னது எனக்கு ஆறுதலாக இருந்தது.

அதிகார வர்க்கத்தினர் பணத்தால் என்மீது அசிங்க மான குற்றச்சாட்டை வைத்து உள்ளே தள்ளினார்கள். நீதிபதி மாணவியிடம் தனிப்பட்டு விசாரித்ததில், அது பொய்ப்புகார்தான் என்றும், அமுதா சிஸ்டர் எழுதியதில் தான் கையெழுத்து போட்டேன் என்றும், அன்று பரிட்சை ஹாலில் நடந்தவற்றை அப்படியே சொல்ல, அதோடு, வீடியோ, ஆடியோ ஆதாரங்களும் உண்மையை வெளிப் படுத்த, நான் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டேன். எல்லாம் சரிதான், திட்டமிட்டு, தவறாக என்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டால் நான் பட்ட அவமானம், அசிங்கம், வேதனைக்கெல்லாம் பதில் என்ன? பொய்ப்புகார் கொடுத்தவர்களுக்கு என்ன தண்டனை?

இப்போது அந்த தாளாளர் தீர்ப்பு வந்த மறுநாள் அமெரிக்காவிற்கு சென்று செட்டிலாகிவிட்டார். எனக்கும் இரண்டு குழந்தைகள் இருக்கு, குடும்பம் இருக்கு. இப்போதுதான் உறவுக்காரர்கள் நலம் விசாரிக்கிறார்கள். இதுநாள் வரை நான்பட்ட வேதனை, அவமானம், இதற்கு என்ன விலை சார்? விடையே இல்லை" என்றார் பரிதாபமாக.

நேர்மையான ஆசிரியரை குற்றவாளிக்கூண்டில் ஏற்றியவர்களுக்கு தண்டனை கிடைக்குமா?

**-அண்ணல்**